### தூத்துக்குடி – காந்திநகர் அரசுப் பள்ளியில் உள்ள –

# ‘அரிசனம்’ என்ற பெயரை மாற்றிடுக!

## தொடக்கக் கல்வி இயக்குநருக்கு – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையத் தலைவர் முனைவர் நீதியரசர் ச.தமிழ்வாணன் – உறுப்பினர் எஸ்.ஆனந்தராஜா பரிந்துரை!

சென்னை, ஜூலை 24-

தூத்துக்குடி மாநகர், காந்தி நகரில் இயங்கும் அரசு தொடக்கப் பள்ளியின் பெயர் பலகையில் ‘இந்து அரிசனத் தொடக்கப் பள்ளி’ என்று இருப்பதில் ‘அரிசனம்’ என்ற வார்த்தையை உடனடியாக நீக்கிட வேண்டும் என கல்வித் துறைக்கு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையத் தலைவர் நீதியரசர் ச.தமிழ்வாணன் - உறுப்பினர் எஸ். ஆனந்தராஜா ஆகியோர் பரிந்துரைத்துள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மாநகரில் காந்தி நகர் பகுதியில் அருந்ததி இன மக்களால் தமிழ்நாட்டிலேயே நடத்தப்படும் ஓர் பள்ளியின் பெயரான ‘இந்து அரிசன துவக்கப் பள்ளி’ என்ற பெயரில் நடைபெற்று வருவதாகவும். இதில் “அரிசனம்” என்ற பெயரினை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை ‘சாதிப் பெயரில் பள்ளிகள் செயல்படக்கூடாது’ என்று தடை செய்துள்ளதால், அந்த பெயரினை மாற்றிட கல்வித் துறைக்கு பரிந்துரை செய்திட மேற்படி பள்ளியின் “அரிசனம்” என்ற பெயரை நீக்கிட வேண்டும் என்று மனுதாரர் மேற்படி இந்து தொடக்கப் பள்ளி சங்க தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் தரப்பில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையத்திற்கு கோரிக்கை வைத்திருந்தனர்.

அரசு உதவி பெறும் மேற்கூறப்பட்ட பள்ளி தொடர்ந்து தூத்துக்குடி நகர் காந்தி நகர் பகுதியில் செயல்பட்டு வருவது சமுதாயத்தின் விளிம்பு நிலையில் உள்ள மக்களுக்கு மிகவும் பயனளிக்கக் கூடிய வகையில் உள்ளது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடம் இல்லை.

‘இந்து அரிசன துவக்கப் பள்ளி’ எனப் பெயர் இருப்பது சட்டத்திற்கும். சமூக நீதிக்கும் புறம்பானதாக உள்ளது. எனவே மேற்கூறப்பட்ட இந்து அரிசனத் தொடக்கப் பள்ளி எனும் பெயரில் உள்ள “அரிசனம்” என்ற வார்த்தையினை நீக்கிட வேண்டும் என தொடக்கக் கல்வி இயக்குநருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

அவ்வாறு “அரிசனம்” என்ற வார்த்தையை நீக்கம் செய்து, உடனடியாக இவ்வாணையத்திற்கு தகவலை தெரிவித்திடவும் தெரிவிக்கப் படுகிறது. இந்திய சுதந்திர தினமான ஆகஸ்ட் தினத்திற்கு முன்னரே “அரிசனம்” என்ற வார்த்தையினை நீக்கம் செய்து. இவ்வாணையத்திற்கு 11.8.2025 தேதிக்குள் அறிக்கையினை அனுப்பி வைக்குமாறு மேற்படி தொடக்கப் பள்ளி இயக்குனர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு இவ்வாணைய அலுவலகத்திற்கு உத்தரவிடப்படு கிறது.

இவ்வாறு ஆணையத்தின் தலைவர் முனைவர் நீதியரசர் ச.தமிழ்வாணன் - உறுப்பினர் எஸ்.ஆனந்தராஜா ஆகியோர் உத்தரவிட்டுள்ளனர்.

### குரூப் 4 விடைத்தாள்கள் கொண்டுவரப்பட்டதில்

# எவ்விதமான குளறுபடிகளும் நிகழவில்லை!

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் விளக்கம்!

சென்னை, ஜூலை 24-

குரூப் 4 விடைத்தாள்கள் கொண்டு வரப்பட்டதில் எவ்விதமான குளறுபடிகளும் நிகழவில்லை என டி.என்.பி.எஸ்.சி. விளக்கமளித்துள்ளது. ‘விடைத்தாள்கள் முறையாக சீலிடப்படாமல் அட்டைப்பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்தன என்று வரும் செய்திகள் அனைத்தும் ஆதாரமற்றவையாகும்’ எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் டிஎன்பிஎஸ்சி வெளியிட்டுள்ள அறிக்கையில்; “தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் அறிவிக்கை எண். 07/2025, நாள் 25.04.2025ன் வாயிலாக நேரடி நியமனத்திற்கு ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - IV (தொகுதி - IV) க்கான தேர்வுகள் கடந்த 12.07.2025 இல் மாநிலம் முழுவதிலும் 4,922 தேர்வு மையங்களில் நடைபெற்றது. இதில் 13.89,238 விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்ததில் 11,48,019 விண்ணப்பதாரர்கள் தேர்வினை எழுதினர். தேர்வுகள் முடிந்து அனைத்து விடைத்தாள்களும் உரிய பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி சீலிடப்பட்ட இரும்புப்பெட்டிகளில் (Stainless Steel Boxes) தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய அலுவலகத்திற்கு 13.07.2025 காலை வரை பாதுகாப்பாக வரப்பெற்றுள்ளன. இதில் எவ்விதமான குளறுபடிகளும் நிகழவில்லை.

இந்நிலையில் சேலம் மாவட்டத்தில் கடந்த 12.07.2025 மு.ப. அன்று நடைபெற்ற ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு IV (தொகுதி - IV) தேர்வு தொடர்பான விடைத்தாள்கள் முறையாக சீலிடப்படாமல் அட்டைப்பெட்டிகளில் இருந்தது என பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களில் இன்று செய்திகள் வந்துள்ளன. சேலம் மாவட்ட விடைத்தாள்களும் சீலிடப்பட்ட இரும்புப்பெட்டிகளில் (Stainless Steel Boxes) தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய அலுவலகத்திற்கு 13.07.2025 அதிகாலை பாதுகாப்பாக வரப்பெற்றுள்ளன. விடைத்தாள்கள் அட்டைப்பெட்டிகளில் கொண்டுவரப்பட்டன என்ற செய்திகளில் உண்மை இல்லை.

OMR விடைத்தாள்கள் அனைத்தும் இரும்புப் பெட்டிகளில் (Stainless Steel Boxes) வைத்து சீலிடப்பட்டு அவை தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய அலுவலகத்திற்கு வந்து சேரும் வரை 24×7 முறையில் நேரலையாக கண்காணிக்கப்பட்டு அவற்றின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இவை முழுவதும் வீடியோ பதிவு செய்யப்பட்டு CCTV Camera மூலமாகவும் கண்காணிக்கப்படுகிறது. எந்த ஒரு விடைத்தாளும் செய்தி ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டவாறு அட்டைப் பெட்டிகளில் கொண்டு வரப்படுவது இல்லை.

பத்திரிகைச் செய்திகளில் கொடுக்கப்பட்டுள்ள புகைப்படங்கள், பயன்படுத்தப்பட்ட காலி அட்டைப்பெட்டிகள் மற்றும் தேர்வுக்கு உபயோகப்படுத்தப்பட்ட பின்னர் உபரியாக இருந்த வினாத்தாள்கள் அடங்கிய அட்டைப் பெட்டிகள் போன்றவையாகும். இவை தேர்வில் பயன்பட்டது போக மீதமிருந்த வினாத்தாள்கள் என்பதால், வழக்கமான நடைமுறையின்படி அந்தந்த மாவட்டங்களிலேயே வைக்கப்பட்டிருக்கும். தேர்வு நடைமுறைகள் முடிந்த பின்னர் இவை மாவட்ட கருவூலகங்கள் மூலமாக மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவது வழக்கம். இது குறித்து தேர்வாணையம் ஏற்கனவே விரிவான நடைமுறையினை வெளியிட்டு பின்பற்றி வருகிறது.

எனவே. 12.07.2025 மு.ப. அன்று நடந்து முடிந்த ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு IV (தொகுதி - IV) தேர்வு தொடர்பான விடைத்தாள்கள் முறையாக சீலிடப்படாமல் அட்டைப் பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்தன என்று வரும் பத்திரிகை மற்றும் இதர ஊடக செய்திகள் அனைத்தும் ஆதாரமற்றவையாகும். வினாத்தாளுக்கான உத்தேச விடைகள் தேர்வாணைய இணையதளத்தில் 21.07.2025 மாலை 05.00 மணியளவில் வெளியிடப்பட்டு ஆட்சேபணைகள் ஏதுமிருப்பின் தெரிவிப்பதற்காக ஒரு வார கால அவகாசமும் அளிக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து அனைத்து தொடர் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு முன்னரே தேர்வாணையத்தால் தெரிவித்தபடி இந்த தேர்வுகளுக்கான முடிவுகள் மூன்று மாத காலத்திற்குள் வெளியிடப்படும்” என தெரிவிக்கப்பட்டுள்ளது.



கும்பகோணம் மாநகர தி.மு.க சார்பில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ பிரச்சார பேரணி மற்றும் திராவிட மாடல் அரசின் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு சாதனை விளக்க புத்தகத்தை பொதுமக்களுக்கு வழங்கும் நிகழ்ச்சியை மாவட்ட பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். உடன் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், பகுதி கழக செயலாளர்கள் இரா.செல்வராஜ், இரா.கல்யாணசுந்தரம், டி.வி.கிருஷ்ணமூர்த்தி, மாநகரக் கழக நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், மண்டலக்குழு தலைவர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நாகை கே.வி. இராமன்

### ஜூலை 24 (2009)



கழகம் துவங்கிய காலத்தில் நாகப்பட்டினம் நகரக் கழகத்தின் முதல் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு, தொடர்ந்து இருபது ஆண்டுகள் நகரச் செயலாளராகவும் பின்னர், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

நாகை மாவட்டம் முழுவதும் ஏராளமான கிளைக் கழகங்கள் ஏற்படுத்தியதுடன், தமிழகத்திலேயே அதிக படிப்பகங்கள் துவக்கி, பேரறிஞர் அண்ணா அவர்களின் பாராட்டையும், தலைவர் கலைஞர் அவர்களின் அன்பையும் பெற்றவர்.

கழகம் அறிவித்த அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறைக்குச் சென்றவர்.

பிராமணர் சமூகத்தைச் சேர்ந்த இவர் 1964ஆம் ஆண்டிலேயே தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையில் சுயமரியாதை திருமணம் செய்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# ‘திராவிட மாடல்’ அரசின் பெண்ணுரிமைத் திட்டங்கள்



தலைவர் கலைஞர் எட்டடி பாய்ந்தால், அவரின் மகன் முதல்வர் அவர்கள் பதினாறடி பாய்கிறார். இது புலிப் பாய்ச்சல், ஆடுகளை அரண்டோட வைக்கும் பாய்ச்சல்.

மக்களுக்காக, மக்களின் நலனுக்காக, மக்கள் நலத் திட்டங்களுக்காக, அத்திட்டங்களின் பயன்கள் மக்களைச் சென்றடைவதற்காக, ஓய்வு ஒழிச்சலின்றி பணியாற்றிக் கொண்டிருக்கிறார் ‘திராவிட மாடல்’ முதல்வர் அவர்கள்.

மக்கள் செல்வாக்குக் கூடுகிறது, ஒன்றியத்தின் மாநிலங்கள், உலக நாடுகள் வரையும் புகழின் உச்சிக்கே சென்று விட்டார் அவர். அதனால் ஒரே நாடாகவும், ஒரே மொழியாகவும் ஆக்கி, இந்நாட்டைப் பார்ப்பன நாடாக மாற்றப் பார்க்கும் காவிகளுக்குப் பெரும் சவாலாக, சீனப் பெருஞ்சுவர் போலத் தடையாக எழுந்து நிற்கிறார் தமிழ்நாடு முதல்வர் கழக தலைவர்

உலகப் பொருளாதார மன்றத்தின் பாலினச் சமத்துவ இடைவெளியைக் குறைக்கும் 2022ஆம் ஆண்டறிக்கை பெண்களின் பொருளாதாரம், கல்வி, உடல் நலம் மற்றும் அரசியல் பங்கேற்புக் குறித்து ஆராய்கிறது. 145 நாடுகள் தர வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. இதில் இந்தியாவின் இடம் 136. பொருளாதாரப் பங்கேற்பில் 143ஆவது இடத்தில் கடைசியிலிருந்து மூன்று இடங்களுக்கு மேலே இருக்கிறது.

பெண்கள் உடல்நலன் பேணுவதில் பெண்களுக்கு கடைசி இடம். இதுதான் சனாதனம் மதவாதம் பேசும் பா.ஜ.க. ஆட்சியின் “சாதனை”.

திராவிட ஆட்சி நடத்தும் தமிழ்நாட்டில் மட்டும் நிலைமை முற்றிலும் வேறு. தேசிய அளவிலான மெக்கன்சே ஆய்வு (2025), பாலினச் சமத்துவத்தைப் பேணுவதில் தலைசிறந்த மாநிலமாக தமிழ்நாட்டையும், கேரளாவையும் குறிப்பிடுகிறது.

32 சதவீதப் பெண்கள் தமிழ்நாட்டில் வேலைக்குச் செல்கின்றனர். இது அகில இந்திய சராசரியை விட இரண்டு மடங்கு அதிகம் இதுதான் திராவிட மாடல்.

உயர்கல்வியில்பெண்கள்சேர்க்கை வீதம் 49 சதவீதம். அகில இந்திய அளவில் இது 25 சதவீதம் மட்டுமே. இது தான் திராவிட மாடல்.

இந்தியாவில் உற்பத்தித் துறையில் ஈடுபடும் 100 பெண்களில் 43 பேர் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள். 2019 -2020)



**சைதை சாதிக்**
**தலைமைக் கழகப் பேச்சாளர்**

குடும்பக் கட்டுப்பாடு சாதனங்களைப் பெறுவது, பேறுகாலத்துக்கு முந்தைய பராமரிப்பு, மருத்துவமனையில் பிரசவங்கள் (வீடுகளில் அல்ல) ஆகிய குறியீடுகளில் தமிழ்நாடு முதலிடம்.

பெண் விடுதலைக்கு உரத்துக் குரல் கொடுத்த பெரியார் சிந்தனைகளை தி.மு.க. ஆட்சி தொடர்ந்து அமுல்படுத்தி வருகிறது.

சுயமரியாதைத் திருமணச் சட்டம் (1967) அண்ணா கொண்டு வந்தார். 1975இல் கலைஞர் கைம்பெண் மறுமணத் திட்டம் கொண்டு வந்து, கைம்பெண்களுக்கு இழப்பீடு வழங்கியதோடு அவர்கள் மறுமணத்தையும் ஆதரித்தது.

கலைஞர் தான் இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் திருத்தம் செய்து, பெண் களுக்கு சமபங்கு சொத்துரிமையில் வழங்கினார். தமிழ்நாட்டில் இந்தச் சட்டம் வந்த பிறகுதான் நாடாளுமன்றத்தில் இந்தியா முழுமைக்கும் சட்டம் வந்தது.

எட்டாவது படித்த பெண்களுக்கு திருமண உதவித் தொகையாக ரூ.5000/ வழங்கும் திட்டம் தி.மு.க. ஆட்சியில் 1989இல் கொண்டு வரப்பட்டது. இதற்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திட்டம் என்று பெயர் சூட்டப்பட்டது.

பெண் பட்டதாரிகளின் உயர்கல்விக்கு உதவி செய்யும் நாகம்மையார் திட்டம் கொண்டு வரப்பட்டது.

கருவுற்ற தாய்மார்களுக்கு நிதி உதவி வழங்கும் முத்துலட்சுமி அம்மையார் திட்டம் கொண்டு வரப்பட்டது.

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை கலைஞர் ஆட்சி வழங்கியதால் பெண்கள் அதிகாரத் தொடர்புகளை வளர்த்துக் கொண்டவர்களாக மாறினார்கள் என்று ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டி பிரஸ் நடத்திய ஆய்வு கூறியது.

கழகத் தலைவர் ஆட்சிக்கு வந்த பிறகு தமிழ்நாட்டில் பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான கொள்கைத் திட்டம் விரிவாக்கப்பட்டது. சட்டமன்றத் தேர்தல்களில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் பதிவு பெற்ற வேட்பாளர்களாக மூன்றில் ஒரு பங்கு பிரதிநிதித்துவம் வழங்க தமிழ்நாடு அரசின் இக்கொள்கை வலியுறுத்துகிறது.

அரசுப் பணிகளில் உள்ள பெண்களின் மகப்பேறு விடுப்பு 9 மாதங்களிலிருந்து 12 மாதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்தியாவிலே இது தான் அதிகம்.

உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50 சதவீத இட ஒதுக்கீடு

அதேபோல்

தமிழ்நாடு அரசின் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் சமூகத்தில் பெண்களிடையே மிகப் பெரிய முன்னேற்றத்துக்கு பயன்பட்டு வருகிறது என்று ‘இந்து’ ஆங்கில நாளேடு (டிசம்பர் 15) விரிவான ஆய்வுக் கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது. மூன்று பண்பு மாற்றங்களை அக்கட்டுரை சுட்டிக்காட்டியுள்ளது. பெண்கள் இளம் வயதில் திருமணம் செய்து வைப்பதைத் தடுத்திருக்கிறது. உயர் கல்விப் பெறும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. எல்லாவற்றையும் விட படிப்பைத் தொடருவதை உறுதிப்படுத்தியுள்ளது.

திட்டக்குழு திரட்டியுள்ள தகவல்களின்படி 2,30,520 மாணவர்கள் மாதம் தோறும் 1000 ஊக்கத்தொகை பெறுகிறார்கள். மாதம்தோறும் அவர்களது வங்கிக் கணக்கில் இது செலுத்தப்பட்டு வருகிறது. இதில் அதிகம் பயன்பெறும் மாவட்டம் சேலம். (17,032 பேர் - 7.38 சதவீதம்) இரண்டாவது நாமக்கல் (13.312 - 5.77 சதவீதம்) அடுத்து தர்மபுரி (11,915 - 5.16 சதவீதம்) சென்னை (11,468 - 4.97 சதவீதம்) திருவண்ணாமலை (11,146 - 4.83 சதவீதம்) கோவை (10,777 - 4.67 சதவீதம்)

இத்திட்டம் அமலான பிறகு இடைநிற்றல் குறைந்ததுடன் மாணவர் சேர்க்கை அதிகரித்துள்ளது என்று முதல்வர் கூறியுள்ளார்.

அரசுப் பள்ளிகளில் படித்த மாணவிகளுக்கு உயர்க் கல்விப் பயணத்தைத் தொடரும் நோக்கத்தோடு கொண்டு வரப்பட்ட இத்திட்டத்தால் கிராமப்புற மாணவிகள் மிகவும் பயனடைந்துள்ளனர். திட்டத்தை அறிவித்ததோடு நிற்கவில்லை. மாணவிகளைச் சந்தித்து அவர்களை உயர்கல்வி நோக்கி வரவழைக்கவும் களப்பணிகளைத் செய்து வருகிறது என்று கல்வி அமைச்சர் அன்பில் மகேஸ் கூறுகிறார்.

பள்ளி மாணவிகளைக் கல்லூரிக்கு வரவழைத்து அவர்களுக்கு எந்தெந்த கல்லூரிகளில், எந்தெந்த பாடங்கள், ஆய்வகங்கள், விளையாட்டு மைதானங்கள் பற்றி எடுத்துக் கூறுகிறோம். அவர்கள் விருப்பத்துக்கு ஏற்ப கல்லூரிகளைத் தேர்வு செய்ய பரிந்துரைக்கிறோம் என்று அன்பில் மகேஸ் கூறுகிறார்.

கிராமப்புற மாணவர்கள் வங்கிக் கணக்கு தொடரவும், வங்கி வரவு செலவு குறித்த அனுபவங்களைப் பெறவும் இத்திட்டம் உதவி வருகிறது.

மாணவிகள் மற்றும் பெற்றோர்களின் பேட்டிகள் அக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளன. நல்லவேலை கிடைப்பதற்கும், நிலைத்த வருமானத்துக்கும், தங்களின் ஆளுமையை வளர்த்துக் கொள்ளவும், எதிர்கால சேமிப்புக்கும், இளம் வயது திருமணங்களைத் தடுப்பதற்கும் இத்திட்டம் உதவுவதாக மாணவிகள் கூறுகிறார்கள்.

பட்டியல் இனப் பிரிவில் 38.6 சதவீதப் பெண்களும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் 34.4 சதவீதத்தினரும் பிற்படுத்தப்பட்டோரில் 24.8 சதவீதத்தினரும் பயனடைவதாக திட்டக்குழு ஆய்வு தெரிவிக்கிறது.

திராவிட மாடலின் இந்தப் பெண்ணுரிமைத் திட்டங்கள் சனாதனத்துக்கு மனுசாஸ்திரத்துக்கு பார்ப்பனியத்துக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டவை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.